

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் 91 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் .உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், பொருளாளர் ரமணன், நகர செயலாளர் கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், மணிமாறன்,பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மனசாட்சி முரசொலிமாறன் அவர்களின் 91 வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, எம்.இராமச்சந்திரன், து.செல்வம், மாவட்ட அவைத்தலைவர் சி. இறைவன், மாநில மருத்துவர் அணி துணைச்செயலாளர் அஞ்சுகம்பூபதி, மாநகர செயலாளர் சண்.இராமநாதன், மாவட்ட பொருளாளர் எல்.ஜி.அண்ணா, மாவட்ட துணைச்செயலாளர் அ.புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி, பொதுக்குழுஉறுப்பினர்,எஸ்.ஆறுமுகம்,டி. புண்ணியமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் எஸ்.செல்லக்கண்ணு, தோ. அருளானந்தசாமி, இரா.உலகநாதன், வை.சிவசங்கரன், எஸ்.செல்வக்குமார், மா.முருகையன், எஸ்.ரமேஸ்குமார், ஜெ.கார்த்திகேயன், பேரூர் செயலாளர்கள் சி.நாகராஜன், டி.கே.எஸ்.ஜி.கல்யாணசுந்தரம், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சி.மேத்தா, டி.எஸ்.கார்த்திகேயன், ஆர்.கே.நீலகண்டன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!

கரூர்.ஆக.19.

கரூரில், என் உயிரினும் மேலான../ கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் மாவட்ட கழக ஒருங்கிணைப்பில் மாவட்ட இளைஞரணி சார்பில் நடைபெற்றது. மாணவ மாணவியர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கரூரில் என் உயிரினும் மேலான.../. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, திமுக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, ஆலோசனைப்படி, மாவட்ட கழக ஒருங்கிணைப்பில் கரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் நடைபெற்றது.

மேலிட பார்வையாளராக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணை செயலாளருமான கே. இ .பிரகாஷ், எம்.பி, நடுவர்களாக கம்பம் செல்வேந்திரன், தாயகம் கவி எம்எல்ஏ, குத்தாலம் அன்பழகன், பிரகதீஸ்வரன், ஆண்டாள் பிரியதர்ஷினி, செந்தில் வேல், ஆகியோர் பணியாற்றினர்.

தலைமை கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார்.

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ எம்.எல்.ஏ,, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன்

மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ். கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ் பாபு, மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத்.

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுபராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி. பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே. வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, பி.ஏ.குமார், கலாவதி சக்திவேல்,

கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க. சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர்.எஸ். ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என். மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி. கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர்

ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் என். செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராய புரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் இராமர் முன்னாள் எம்.எல்.ஏ., தோகைமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா. அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி. தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம். முத்து (எ) சுப்பிரமணி, அரவக்குறிச்சி பேரூர் பொறுப்பாளர் பி.பாலசுப்பிரமணி, கரூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கமேடு எஸ். சக்திவேல், துணை அமைப்பாளர்கள் சிகே.ராஜா, கனகராஜ், ஆத்தூர் பாபு, யுவராஜ், ஜிவி அருண், அணி அமைப்பாளர்கள் ஆர் ஜி. சரவணமூர்த்தி, ஜிம் சிவா, கே. நந்தினி தேவி, கே.தாச பரகாஷ், ஏ.

சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி .சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண் பி. மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, எம் பிரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம் விக்ரம், கு.வடிவேல், எஸ். செல்வராஜ், சாவி நல்லுசாமி, எஸ். மனோகர், எம்ஆர் எஸ் சுரேஷ்,, பங்க் கே. சுப்பிரமணி, விஆர். அண்ணா வேலு,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், எஸ்.காமராஜ், பி. காமராஜ், ஏ.அறிவழகன், Ex.MLA, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### வல்லம் ஒன்றியம் – காரியமங்களத்தில் நடைபெற்ற

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 19 -

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் காரிய மங்களம் கூட்டு சாலையில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்நிகழ்ச்சி நடைபெற்றது.

வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட ஆதிதிராளர் நல அலுவலர் வளர்மதி அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்து பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காண வேண்டும் என அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

பொதுமக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் செயல் படுத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் மக்களுடைய தேவையை கேட்டு தெரிந்து அறிந்து அதை நிறைவேற்றி தர வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தில் கொடுக்கப்படும் பொது மக்கள் கோரிக்கை மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் பரிசிலனை செய்து உடனுக்குடன் மக்களுக்கு நன்மை கிடைப்பதற்காக இத் திட்டத்தை முதலமைச்சர் செயல் படுத்தி உள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வளர்மதி,வட்டாட்சியர் ஏழுமலை,ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள்,திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மதுரை வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, ஆக 19-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கி வருகிற 29.08.2024 அன்று மதுரை வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்,

அவரது அறிக்கை வருமாறு:-

சென்னையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரம்மாண்ட வெற்றி பெற்றதற்கு கழக தலைவருக்கு நன்றி தெரிவித்தல்,

கழகத்தின் பவள விழாவை வரவேற்கும் வகையில் கொண்டாடப்பட உள்ள முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை விளக்கும் வகையிலும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.வின் பொது உறுப்பினர்கள் குழு கூட்டம் கிழக்கு தொகுதிக்குட்பட்ட பொய்கைக்கரை பட்டியில் அமைந்துள்ள ஏ.கே. என்.கே பேலஸ் திருமண மஹாலில் வருகிற 29.08.2024 அன்று காலை 10.30 மணி அளவில் பிரமாண்ட மாக நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சரித்திரம் அவர்! சகாப்தம் அவர்! முத்தமிழறிஞர்

# கலைஞருக்கு நினைவு நாணயம் மட்டுமல்ல -இந்தியாவின் உயர் விருதுகள் அனைத்தும் வழங்கப்பெற வேண்டும்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் அறிக்கை!



சென்னை, ஆக.19-

சரித்திரமாகவும், சகாப்தமாகவும் திகழும் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர் கலைஞருக்கு நூற்றாண்டு நினைவு நாணயம் மட்டுமல்ல, இந்தியாவின் உயர் விருதுகள் அனைத்தும் வழங்கப்பெற வேண்டும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் அவர்கள் பெரியார் பாதி, அண்ணா பாதி என்று இந்த உலகமே போற்றும் திராவிட தலைவர் ஆவார். காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் நீர் மேலாண்மை, சேது சமுத்திர திட்டத்தில் வணிக மேலாண்மை, மேம்பாலங்கள், சாலைகளால் போக்குவரத்து மேலாண்மை, விவசாய கடன் தள்ளுபடி, மருத்துவ காப்பீட்டில் மக்கள் நல வாழ்வு மேலாண்மை, தேர்தல் வெற்றி எனும் அரசியல் மேலாண்மை என தமிழக மக்களுக்காக உழைத்த உன்னத தலைவர். இனி யாரும் கலைஞர் போல் பிறக்க போவதும் இல்லை. இனி பிறக்கப் போகின்றவர்களும் தலைவரை நினைக்காமல் இருக்கப் போவது மில்லை.

உள் எண்ணத்தின் சிறப்பை பேனா மையில் ஊன்றிய என் கலைஞரே, தமிழ் மொழி வளர்ச்சிக்கு தொழில் நுட்பம் புகுத்தியவர். தொல்காப்பிய பூங்கா, நூற்றாண்டு நூலகம் கொணர்ந்தவர். திராவிட கொள்கையை உயர்த்தி ஏங்கும் உள்ளங்களில் ஒளி தீபமாய் நிற்கும் எங்கள் கலைஞரே, தமிழுக்கு தவப்புதல்வன் நீ, கடிகார முள்ளாய் ஓயாது உழைத்தாய், தமிழகத்தின் வளர்ச்சிக்கு நாளும் வித்திட்டாய்.

செம்மொழியின் நறுமண நாயகனே உங்கள் சுவிதிறனும், குறள் ஒலியும் புவி உள்ள வரை மாறாது, மறையாது. கருணாநிதி என்ற உன் பெயரில் கரு, திரு, கருணை, குணம், நீதி என்ற வாழ்வியல் தேடல் கொண்ட வாக்கியம் அதை உண்மையாக்கி பகிர்ந்து வாழ்வதே எங்கள் பாக்கியம். விதவைக்கு இரு பொட்டு வைத்து கைம்பெண்ணாக்கி மறுமலர்ச்சி தந்த தலைவனே.

திருநங்கை என்று திருநாமம் சூட்டிய மனுநீதியே.

ஊனமுற்றோர் என்ற சொல் சுடுவதாக உள்ளது என்று மாற்றுத்திறனாளி என்று அழைத்த மறுமலர்ச்சி நாயகனே உங்களுக்கு நினைவு நாணயம் மட்டும் அல்ல இன்னும் பல இந்திய நாட்டில் உள்ள உயர் விருதுகளை பெற வேண்டும், தர வேண்டும் ஏனென்றால் நீங்கள் தமிழர்களுக்கு தந்தை அல்லவா.

சூரியன் என்றும் இறப்பதும் இல்லை, மறைவதும் இல்லை. வாழ்க கலைஞர், வாழ்க தளபதி, வாழ்க இளைய தளபதி.

இவ்வாறு திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முரசொலி மாறன் அவர்களின் 91 வது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களின் திருவுருவப்படத்திற்கு கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி மாவட்ட அவைத்தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.




முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 91 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு, விழுப்புரம் தெற்கு மாவட்டம் சார்பில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி இனிப்புகளை வழங்கினார். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்ச நாதன், மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்